# நாவல் இலக்கியத்தில் வாழ்வியலும் பாத்திரப்படைப்பும்

**தா. தரணி, & முனைவர் ச. சுமதி**
**முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,**
**முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி (த),**
**வேலூர் - 632002**

131

**ஆய்வுச் சுருக்கம்**

~நாவல் இலக்கியத்தில் வாழ்வியலும் பாத்திரப்படைப்பும்| என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது. நாவலில் வாழ்வியல் பற்றியும், பாத்திரப்படைப்புப் பற்றியும் மேலைநாட்டு, உள்நாட்டு நாவலாசிரியர்களுக்கு எழும் சிந்தனைகள் ஒரே மாதிரியாக விளங்குவதை இவ்வாய்வுக்கட்டுரை ஆராய்கின்றது. வாழ்வியலும், பாத்திரப்படைப்பும் நாவல் இலக்கியத்தில் எவ்வாறு இன்றியமையாததாக விளங்குகின்றது என்பதை மேலைநாட்டு அறிஞர்களான ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ், வால்டர் ஆலன், டால்ஸ்டாய் போன்றோரின் கருத்துக்களும், உள்நாட்டு அறிஞர்களான இரா. பாலசுப்பிரமணியன், கரு. முத்தையா, இரா. தண்டாயுதம், க. கைலாசபதி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, புதுமைப்பித்தன், அ.ச. ஞானசம்பந்தர் போன்றோரும்;, சேம்பர்ஸ் அகராதி போன்றவர்களின் சிந்தனைகளின்வழி ஆராயப்பட்டுள்ளது. இதில் நாவல் சொல் விளக்கம், நாவல் தோற்றம் - வளர்ச்சி, நாவலும் பாத்திரப் படைப்பும், நாவலும் வாழ்வியலும் என்னும் தலைப்புகளின் மூலம் ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**முன்னுரை**

நாவல் இலக்கியத்தில் வாழ்வியலும் பாத்திரப்படைப்பும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. நாவல்கள் சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன. நாவல்களில் வாழும் மனிதர்களே பாத்திரங்களாக உருவகப்படுத்தப்படுகின்றனர். நாவலில் ஆசிரியர் தம்முடைய விருப்பப்படி பாத்திரங்களை மெருகூட்டிக்கொள்கிறார். தம்முடைய படைப்பாற்றலை நாவலாசிரியர் நாவலின் மூலம் வெளிப்படுத்துகின்றார். நாவல்களைப் படிக்கும் மக்களுக்கு பாத்திரங்கள் உண்மை உணர்வுடன் தோற்றம் கொள்கின்றது. நாவலின் வித்து தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றியுள்ளதை தொல்காப்பியத்தின் மூலம் அறிகிறோம். நாவலில் அன்றாடம் நடக்கக்கூடிய நிகழ்வுகளை நாவலின் மூலம் நாம் காண்கிறோம். ஒரு நாவலை நாம் படிக்கும் பொழுது நாம் எங்கேயோ பார்த்த, கேட்ட பல நினைவுகள் நம்முடைய நினைவிற்கு தோன்றுகின்றது. அவ்வாறு வாழ்க்கையில் நிகழும் அனுபவங்களைத் தத்ரூபமாக நாவலில் ஆசிரியர்கள் எழுதுகின்றனர். மனிதனுடைய வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை அவனுடைய அனுபவத்தையே நாவலாசிரியர்கள் தங்களுடைய நாவலின் வழி வெளிப்படுத்துகின்றனர். மேலைநாட்டு நாவலாசிரியர்களுக்கும் உள்நாட்டு நாவலாசிரியர்களுக்கும் நாவலின் மீது ஒரேமாதிரியானச் சிந்தனையைத் தோற்றுவிக்கின்றது. அவ்வகையில், ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ், வால்டர் ஆலன், டால்ஸ்டாய், இரா. பாலசுப்பிரமணியன், கரு. முத்தையா, இரா. தண்டாயுதம், க. கைலாசபதி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, புதுமைப்பித்தன், அ.ச. ஞானசம்பந்தர் போன்றோரும் மற்றும் சேம்பர்ஸ் அகராதி ஆகியோரின் சிந்தனைகளின் வாயிலாக நாவல் இலக்கியத்தில் வாழ்வியலையும், பாத்திரப்படைப்பையும் இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்கின்றது.

நாவல் - சொல் விளக்கம்

நாவல் (யேஎயட) என்னும் சொல் மேலைநாட்டில் தோன்றியதாகும். உண்மை போன்று தோன்றும் நீண்டதொரு கற்பனைக் கதையே நாவலாகும். இதனை புனைக்கதை, நெடுங்கதை, நவீனம் என்று அழைத்தனர். நாவல் என்பதற்கு ஆங்கிலத்தில் புதுமை, புதினம் என்று அழைக்கப்பட்டாலும், இதை தமிழ்ச் சொல்லாகவே கருதப்படுகின்றது. இதனை முனைவர் இரா. பாலசுப்பிரமணியன் அவர்கள்,

~நாவல் என்னும் ஆங்கிலச் சொல் நவீனம் எனத் தமிழில் மொழிப்பெயர்க்கப் பெற்றது. நாவல் என்ற சொல் புதுமை என்ற பொருள் தருவதால் புதினம் என்று கூறும் வழக்கம் உருவானது. ஆனால் தற்போது நாவல் என்ற சொல் தமிழ்ச் சொல்லாகவே கருதப்படுகின்றது|1 என்று குறிப்பிடுகின்றார்.

**நாவல் தோற்றம் வளர்ச்சி**

கி.பி.15 மற்றும் 16-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய அச்சு இயந்திரங்களே உரைநடை இலக்கியங்கள் பெருமளவில் தோன்றக் காரணமாக அமைந்தது. 1450-ஆம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த யொகான் குட்டன் பெர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இது மேல்நாட்டு இலக்கிய வடிவங்களான கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் போன்றவைகள் தமிழில் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன. 18-ஆம் நூற்றாண்டில் மேலைநாடுகளில் தோன்றி வளர்ச்சிப் பெற்றதாக கருதப்படும் நாவல் இலக்கியம் இந்தியாவில் 19-ஆம் நூற்றாண்டு இறுதியில் தோன்றியது.

இந்தியாவில் முதல் நாவல் தோன்றுவதற்கு, உரைநடையின் வளர்ச்சி ஆங்கிலேயரின் தொடர்பு, சமுதாய மாற்றம் போன்றவைகள் காரணமாக அமைந்தன, 1882-ஆம் ஆண்டு வங்க மொழியில் எழுதப்பட்ட ஆனந்தமடம் என்ற நாவலை பக்கிம் சந்திரர் அவர்கள் எழுதினார். இதுவே இந்தியாவின் முதல் நாவலாகும். பின்னர் மற்ற மொழிகளில் நாவல்கள் தோன்றின. தமிழ்மொழியில் நாவல் எனும் புதிய வடிவம் தோன்றுவதற்கு ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் ஆங்கில மொழித் தாக்கங்களே காரணமாக அமைந்தன. சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளின் பிரதிபலிப்பாக நாவல்கள் விளங்கின. 19ஆம் நூற்றாண்டு நாவல் இலக்கியத்திற்குப் பொற்காலமாக அமைந்திருந்தாலும் நாவலின் வித்து தொல்காப்பியர் காலத்திலேயே உணரப்படுகின்றது.

~பாட்டிடை வைத்த குறிப்பினாலும்
பாவின் றெழுந்த கிளவியானும்
பொருள் மரபு இல்லாப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்
உரை வகை நடையே நான்கு என மொழிப|2

என்று தொல்காப்பியர் நான்கு வகையாக உரையைப் பிரித்து இலக்கணம் கூறுகி;ன்றார். இதில் பொருளொடு புணர்ந்த நகைமொழி எனக் குறிப்பிடுவது புதினத்தைக் குறிக்கின்றது. தமிழில் முதல் நாவலான ~பிரதாபமுதலியார் சரித்திரம்| 1876ஆம் ஆண்டு மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பட்டது. அதனை தொடர்ந்து ~கமலாம்பாள் சரித்திரம்,| ~பத்மாவதி சரித்திரம்| என பல நாவல்கள் தோன்றின. மேலும் நாவல்களின் வளர்ச்சிக்கு இதழ்களின் பங்கு இன்றியமையாதது. இவ்வாறு நாவல் இலக்கியம் படிப்படியாக வளர்ச்சி அடைந்த வண்ணம் உள்ளது.

நாவலில் பாத்திரப்படைப்பு

பாத்திரங்கள் நாவலில் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பிடிக்கின்றது. படிப்பவர்களின் கவனத்தை ஈரப்பதிலும் கதைமாந்தர்களே முதன்மையான இடத்தில் உள்ளனர். கதையின் கதைமாந்தர் படைப்பைச் சுவையுடையதாகச் செய்ய அவர்கள் ஒவ்வொருவரையும் தனி இயல்புடையவராக அமைப்பது ஒரு நுட்பமான கலையாகும். நாவலைப் பயனுடையதாகவும், தரமுடையதாகவும் ஆக்குவது பாத்திரப் படைப்பே ஆகும். இத்தகையப் பாத்திரப் படைப்பைப் பற்றி நம்முடைய நாவலாசிரியர்களும் மற்றும் மேலைநாட்டு நாவலாசிரியர்களும் தங்களுடைய கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வகையில் பாத்திரங்கள் நாவலில் இன்றியமையாத ஒன்றாகவும் முதலிடம் பெறும் ஒன்றாகவும் விளங்குகின்றது என்பதை வால்டர் ஆலன் அவர்கள்,

~பாத்திரப்படைப்பு என்பது ஒரு பகுதியே என்றாலும் அது ஒரு இன்றியமையாத பகுதி என்பதும் சிறப்பு வரிசையில் முதலிடத்தைப் பெறும் பகுதி என்பதும் தெளிவு|3

என விளக்குகின்றார். மேலும் இரா. தண்டாயுதம் அவர்கள் ஒரு நல்ல நாவல்களின் அடிப்படையானது பாத்திரங்கள் தவிர வேறு எதுவுமில்லை என்பதை,

~நல்ல நாவல்களின் அடிப்படையே பாத்திரப்படைப்பு தான் வேறொன்றுமில்லை|4

என்று கூறுகின்றார். சிறந்த நாவல்களை நாம் படிக்கும்போது அந்நாவலில் காணப்படும் கதாபாத்திரங்கள் உயிருள்ளவைகளாகத் திகழுகின்றன. அத்தகைய ஆற்றலுடைய பாத்திரங்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கின்றது என்பதை க. கைலாசபதி,

~நாவலில் பாத்திரங்கள் உயிர்நாடியாய் அமைகின்றது|5

என்று கூறுகின்றார். நாவலில் பாத்திரங்களைப் பற்றி கல்கி தம்முடைய அலைஓசை நாவலின் முன்னுரையில்,

~அலைஓசையை நான் எழுதியதாகவே எண்ணக்கூடவில்லை. லலிதாகவும், சீதாவும், தாரிணியும், சூரியாவும், சௌந்தரராகவனும், பட்டாபிராமனும் சேர்ந்து பேசிக் கொண்டு அவர்களுடைய அந்தரங்க ஆசாபாசங்களையும், உள்ளக் கிளர்ச்சியையும் வெளியிட்டு அலைஓசையை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் கற்பனை செய்யப்பட்ட பாத்திரங்கள் என்றே என்னால் எண்ண முடியவில்லை|6

எனக் கூறுகின்றார். நாவலில் பாத்திரங்களை உனக்கு நீ கருக்கொள்கின்றாய். ஆனால் அவைகள் உயிர் பெற்று வாழ்வது அவசியமாகின்றது என்பதை ருஷ்ய நாட்டினைச் சேர்ந்த, இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த எழுத்தாளரான டால்ஸ்டாய்,

~ஆசிரியர் தான் உருவாக்கும் கதைமாந்தருடன் சேர்ந்து வாழும் வாழ்க்கையே நாவல் ஆகும்|7

என்று அவர் கருதுகின்றார். நாவலில் ஆசிரியர்களால் காட்டப்படும் பாத்திரங்கள் கற்பனையில் தோன்றியவர்களாக இருந்தாலும் வாழ்வில் காணும் உண்மை மாந்தர்களே உருமாற்றம் பெற்று கதை மாந்தராகின்றனர்.

**நாவலும் வாழ்வியலும்**

அன்றாடம் மக்களின் வாழ்வில் பல அனுபவங்கள், பல கருத்துக்கள் பிறக்கின்றன. வாழ்க்கையில் நடக்கக் கூடிய அனுவங்களை அறிஞர்கள் பலர் தங்களுடைய நாவல்களின் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர்.

ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் என்ற மேலைநாட்டு அறிஞர், ~வாழ்வின் நன்மைகளை மிகுதிப்படுத்த நாவல் இலக்கியங்கள் துணை நிற்க வேண்டும்| என்று கூறுகின்றார்.

வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் ஏற்படுகின்ற சிக்கல்களை இயல்பாக எடுத்துக்காட்டுவதே நாவல் இலக்கியம் என்பதை புதுமைப்பித்தன்,

~நாவல் வாழ்க்கையை அதன் பல்வேறு அம்சங்களுடனும் அவற்றின் சிக்கல்களுடனும் அவற்றின் பிணைப்புகளுடனும் எடுத்து வாழ்க்கையின் ஜீவநாடி குன்றாமல் எழுதுவது|8

என்று கருதுகின்றார். மேலும் சிறப்பான நாவல்கள் மனிதனுடைய அனைத்து உணர்வுகளையும் அழகான முறையில் வெளிப்படுத்தும் என்று அ.ச. ஞானசம்பந்தர்,

~மக்களின் வாழ்க்கையில் காணப்படும் அழகான உணர்ச்சிகள், போராட்டங்கள் இவைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் நாவல்களே மிகச் சிறப்புடையன|9

எனச் சிந்திக்கின்றார். நாவல் என்பது ஆண், பெண் வாழ்க்கையில் அவர்களின் உணர்ச்சி மிகுந்த நிகழ்வுகளை சித்தரிப்பது என்பதை சேம்பர்ஸ் அகராதி,

~உரைநடையில் அமைந்த புனைக்கதை அல்லது ஆண் பெண்களாகிய மாந்தர்களின் வாழ்க்கையில் உணர்ச்சி நிறைந்த நிகழ்ச்சிகளைச் சித்தரித்துக் காட்டுவது|10

என்று விளக்கமளிக்கிறது. வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ரசனையான தகவல்களே இலக்கியம் என்பதை புதுமைப்பித்தன்,

~வாழ்க்கையில் அர்த்தத்தைச் சொல்லுவது தத்துவம் வாழ்க்கையைச் சொல்வது அதன் ரசனையைச் சொல்வது இலக்கியம்|11

என்று கூறுகின்றார். ஆக, வாழ்க்கையில் நடக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் நாவலில் இடம்பெறுவதாக ஆசிரியர்கள் விளக்கமளிக்கின்றனர்.

முடிவுரை

நாவல்களில் பாத்திரங்களாக உருவெடுப்பது சமுதாயத்தில் வாழ்கின்ற மாந்தர்களே. அவ்வகையில் நாவலுக்கு பாத்திரங்கள் முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். ஒரு நாவலாசிரியரின் படைப்பாற்றல் அவர் உருவாக்கும் பாத்திரங்கள் மூலம் வெளிப்படும். நாவலின் ஓட்டத்திற்கு பாத்திரங்களே துணை நிற்கின்றது. மனிதனுடைய அன்றாடம் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளையே நாவல் காட்டுகின்றது. மனிதனுக்கு ஏற்படும் வாழ்வின் அனைத்து அனுபவங்களையும் நாவலாசிரியர் நாவலின் மூலம் விவரிக்கின்றார். எனவே வாழ்க்கை அனுபவங்களை நன்கு அறிந்த, உணர்ந்தவராக நாவலாசிரியர் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் சிறப்பான நாவலை அளிக்க முடியும். ஆகவே, பாத்திரப் படைப்பும், வாழ்க்கையின் அனுபவமும் நாவலுக்கு இன்றியமையாத ஒன்றாக கருதிய மேலைநாட்டு, உள்நாட்டு அறிஞர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். நாவல் மீதான கருத்துகள் அனைத்து நாவலாசிரியர்களுக்கும் ஒருமித்துக் காணப்படுகின்றது. அக்காலத்திலும், இக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே நாவல் விளங்குகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் இரா. பாலசுப்பிரமணியன், நாவல் கலையியல், ப.9
2. தொல்காப்பியர், தொல்காப்பியம், நூற்.1429
3. கரு. முத்தையா, செயகாந்தன் நாவல்களில் பாத்திரப்படைப்பு, ப.19
4. இரா. தண்டாயுதம், சமூக நாவல்கள், ப.23

5. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப.39
6. கல்கி. கிருஷ்ணமூர்த்தி, அலைஓசை, முன்னுரை.
7. புலியூர்கேசிகன் (க.ஆ), ப.192
8. புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் கட்டுரை, ப.58
9. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப.363
10. சேம்பர்ஸ் அகராதி
11. புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் கட்டுரைகள், ப.55

**துணை நூற்பட்டியல்**


1. கல்கி கிருஷ்ணமூர்த்தி - அலைஓசை,

பாரதி பதிப்பகம்,

சென்னை - 17

மு.ப. 1953

2. கைலாசபதி, க., - தமிழ் நாவல் இலக்கியம்,

மக்கள் வெளியீடு,

எல்லிஸ் சாலை,

சென்னை - 2

1968

3. ஞானசம்பந்தன், அ.ச., - இலக்கியக் கலை,

பாவை பப்ளிகேஷன்ஸ்,

16(142), ஜானி ஜான்கான் சாலை,

இராயப்பேட்டை,

சென்னை - 14

இ.ப. 2016

4. தண்டாயுதம், இரா., - சமூக நாவல்கள்,

தமிழ்ப் புத்தகாலயம்,

சென்னை - 5.

1979

5. தொல்காப்பியர் (தமிழண்ணல்) - தொல்காப்பியம், பொருளதிகாரம்,

மீனாட்சி புத்தக நிலையம்,

48, தனப்பா முதலி தெரு,

மதுரை - 01.

ஐ.ப. 2017

6. முனைவர் பாலசுப்பிரமணியன், இரா. - நாவல் கலையியல்,

ருnவைநன டீைனெ புசயிhiஉளஇ

101-னுஇ சுழலயிநவவயல ர்பா சுழயனஇ

ஊhநnயெi - 04




Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

2004
7. புதுமைப்பித்தன்- புதுமைப்பித்தன் கட்டுரைகள்,
ஸ்டார் பிரசுரம்,
சென்னை - 17
1988
8. முத்தையா, கரு.,- செயகாந்தன் நாவல்களில் பாத்திரப்படைப்பு,
முத்து மீனாள் பதிப்பகம்,
தேவகோட்டை - 2
1980